### பழமொழியாகமம் 11:25

நன்மையை ஆசிக்கிற ஆன்மா பூரணமடையும்; (மற்றவர்களைப்) பூரிக்கச்செய்கிறவன் தானும் பூரிக்கப் படுவான்.

### கொரிந்தியர் 2 9:7

ஆகிலும் மனவருத்தத்தோடுமல்ல, கட்டாயத்தினாலுமல்ல, அவனவன் தன் இருதயத்தில் தீர்மானித்தபடியே கொடுக்கக்கடவான். ஏனென்றால் முகமலர்ந்து கொடுக்கிறவனிடத்தில் சர்வேசுரன் பிரியப்படுகிறார். (சர்வப். 35:11.)

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 6:38

கொடுங்கள், உங்களுக்கும் கொடுக் கப்படும்; அமுக்கவும் குலுக்கவும்பட்டுச் சரிந்துவிழும் நல்ல அளவை உங்கள் மடியில் போடுவார்கள். ஏனெனில் நீங்கள் அளந்த அளவினாலேயே உங்களுக்கும் பதில் அளக்கப்படும் என்றார். (மத். 7:2; மாற். 4:24.)

### கொரிந்தியர் 2 8:12

கொடுக்கும்படி ஒருவனுக்கு நல்ல மனமிருந்தால், அவன் சக்திக்கு மிஞ்சினதல்ல, அவன் சக்திக்குத் தக்கது (கொடுப்பது) அங்கீகரிக்கப்படும்.

### கொரிந்தியர் 2 9:11

இந்தப்பிரகாரமாய் நீங்கள் சகலத்திலும் நிறைந்தவர்களாகி, எங்களாலே சர்வேசுரனுக்குத் தோத்திரமுண்டாவதற்கு ஏதுவாகச் சகல நேர்மையான தர்மத்திலும் பெருகி வளருவீர்கள்.

### சங்கீதங்கள் 112:5

உந்நத ஸ்தலங்களில் வசிக்கிற வருமாய், பரலோகத்திலும் பூலோ கத்திலுந் தாழ்வானவைகளை முதலாய் நோக்குகிறவருமாய்,

### கொரிந்தியர் 2 9:10

ஆகையால் விதைக்கிறவனுக்கு விதையைக் கொடுக்கிறவர் உங்களுக்குப் புசிப்பதற்கு அப்பத்தையுங் கொடுத்து, உங்கள் விதையையும் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் பலன்களையும் வர்த்திக்கப்பண்ணுவார்.

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 6:30

உன்னைக் கேட்கிற எவனுக் கும் கொடு; உன்னுடையவைகளைப் பறித்துக் கொள்ளுகிறவனிடத்தில் அவைகளைத் திரும்பக் கேளாதே;

### இசாயாஸ் ஆகமம் 40:29

அவர்தான் களைத்தவனுக்குப் பலங்கொடுக்கின்றவர்; அபல மானோர்க்குச் சத்துவத்தையும் பலத்தையும் மூட்டுகிறவர்.

### இயாகப்பர் பொது நிருபம் 1:5

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால், கடிந்து கொள்ளாமல் யாவருக்கும் ஏராளமாய்க் கொடுக்கிற சர்வேசுரனிடத்தில் கேட்கக்கடவான். அப்போது அவனுக்குக் கொடுக்கப்படும். (மத். 7:7.)

### அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 11:13

ஆனால் நீங்கள் தீயோராயினும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல கொடைகளைக் கொடுக்க அறிந்தி ருக்கும்போது, உங்கள் பரம பிதாவானவர் தம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு எவ்வளவோ அதிகமாய் நல்ல இஸ்பிரீத்துவைத் தந்தருளுவார் என்று திருவுளம்பற்றினார்.